# கூட்டுறவு

மலர் : 96 ✦ ஆகஸ்ட் : 2023 ✦ இதழ் : 5

**கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்க இதழ்**

எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை

ஆசிரியர்:

**கோ.க.மாதவன்,** எம்.ஏ., பி.எட்., எச்.டி.சி.எம்.,

தொலைபேசி : 2836 4865 & 66
ஃபேக்ஸ் : 2836 4035

மின்னஞ்சல் : tncu08@gmail.com

**இணையதளம்: www.tncu.tn.gov.in**

**ஆயுள் சந்தா ரூ. 2000**
**(பத்தாண்டுகளுக்கு)**
**ஆண்டு சந்தா ரூ.210**
**தனிப்பிரதி விலை ரூ.20**

## விளம்பரக் கட்டணம்

பல வண்ணம் (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| **அட்டை 4 ஆம் பக்கம்** | **ரூ.** | **50,000** |
| **அட்டை 2 & 3ஆம் பக்கம்** | **ரூ.** | **40,000** |

உள்ளே கருப்பு–வெள்ளை (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| **முழுப்பக்கம்** | **ரூ.** | **24,000** |
| **அரைப்பக்கம்** | **ரூ.** | **12,000** |

உள்ளே கருப்பு–வெள்ளை (6 மாதங்களுக்கு)

| | | |
|---|---|---|
| **முழுப்பக்கம்** | **ரூ.** | **12,000** |
| **அரைப்பக்கம்** | **ரூ.** | **6,000** |

## இந்த இதழில்...

05 ✦ சென்னை கோட்டை கொத்தளத்தில் நாட்டின் 77–ஆவது சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக்கொடி ஏற்றினார்

09 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குவது தொடர்பான ஆய்வு

11 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், காளையார்கோவில் ஊராட்சி மற்றும் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்து, மொத்தம் 653 பயனாளிகளுக்கு ரூ.6.05 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

17 ✦ செங்கல்பட்டு மாவட்டத்தில் மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தர தொழில்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை நியாயவிலைக் கடைகள், பல்பொருள் அங்காடி மற்றும் கிடங்கு கட்டட திறப்பு விழா

19 ✦ ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆய்வு

25 ✦ கடலூரில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவு நிறுவனங்களை ஆய்வு செய்தார்

31 ✦ தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள்

35 ✦ மன அழுத்தம் போக்கும் மருந்து – கொடுக்காய்ப்புளி

39 ✦ தென்னையில் இலாபகரமான ஊடுபயிர்– அன்னாசிப் பழம் சாகுபடிக் குறிப்புகள்

# திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

## 01.01.2020 முதல் புதிய வட்டி விகிதம்

| வட்டி விகிதம் | பொது மக்கள் | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.10% | 4.10% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.25% | 4.25% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.00% | 6.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.75% |
| ஓராண்டும் அதற்கு மேலும் | 7.00% | 7.25% |

*சேமிப்பிற்கு சிறந்த வங்கி!* *சேவைக்கு உகந்த வங்கி !*

**விபரங்களுக்கு:**

தலைமையிடம் மற்றும் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கிளைகளை அணுகவும்.

தொடர்புக்கு: 0431 2702441, 442, 443


## அட்டைப்பட விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 77–ஆவது சுதந்திரத் திருநாளையொட்டி 15.8.2023 அன்று சென்னை. தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

# சென்னை கோட்டை கொத்தளத்தில் நாட்டின் 77-ஆவது சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக்கொடி ஏற்றினார்.



சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் நாட்டின் 77–ஆவது சுந்திர தினம் 15.8.2023 அன்று கொண்டாடப் பட்டது. இதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 3–வது முறையாக, தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து சுதந்திர தின உரை நிகழ்த்தி சில அறிவிப்புகளை அறிவித்து பேசியதாவது :

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்துக்கு அவரது பெயர் சூட்டப்படும். சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ. 10 ஆயிரத்தில் இருந்து ரூ. 11 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

புதுமைப்பெண் திட்டத்தில், இந்த ஆண்டில் உயர்கல்வி பயிலும் 2.11 இலட்சம் மாணவிகளுக்கு மாதம் ரூ. 1,000 வழங்க ரூ. 350 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**‘விடியல் பயணம்’ திட்டம்**

அரசுப் பேருந்துகளில் கட்டண மின்றி பயணிக்கும் திட்டத்தில் தினமும் 50 இலட்சம் பெண்கள் பயணம் செய்கின்றனர். இத்திட்டத்துக்கு ‘விடியல் பயணம்’ என பெயர் சூட்டப்படுகிறது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 15–ஆம் தேதி 1 முதல் 5–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவுத்திட்டம் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, வரும் கல்வி ஆண்டு முதல் 31,008 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15.75 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், வரும் ஆகஸ்ட் 25ஆம் தேதி முதல் மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படுகிறது. மறைந்த முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பயின்ற திருக் குவளை பள்ளியில் இத்திட்டம் தொடங்கப் படும். இதற்காக இந்த நிதியாண்டில் ரூ. 404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இளம் வயதை ராணுவப் பணியில் கழித்து, பணிக் காலம் நிறைவு பெற்று திரும்பும் முன்னாள் ராணுவத்தினர் பயன்பெறும் வகையில், ரூ. 7 கோடியில், 10 ஆயிரம் பேருக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, திறனை மேம்படுத்தவும், அவர்கள் உரிய பணியில் அமரும் வரை தக்க உதவி செய்யவும், 'நான் முதல்வன்' திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### தனியாக நல வாரியம்

ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களை சார்ந்த பணியாளர்களின் நலனை பாதுகாக்க, தனியாக நலவாரியம் அமைக்கப்படும்.

பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ வாங்க ரூ. 1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தில் 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், மேலும் 500 பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவரும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

### 55,000 பணியிடங்கள்

பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக உள்ள 55 ஆயிரம் பணியிடங்கள் நடப்பு ஆண்டில் நிரப்பப்படும்.

சென்னை கதீட்ரல் சாலையில் செங்காந்தள் பூங்கா அருகே உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் ரூ. 25 கோடியில் 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' அமைக்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டபேரவை தலைவர் திரு. அப்பாவு அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், தலைமை நீதிபதி திரு. எஸ்.வி.கங்கா புர்வாலா, நீதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தூதரக அதிகாரிகள், துறை செயலர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ✤



சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் 15.8.2023 அன்று நடைபெற்ற 77–ஆவது சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் 'மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பான சேவை அளித்த' வகையில், சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியாக தேர்வு செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் திரு. சு.மனோகரனிடம் விருது மற்றும் சான்றிதழ் வழங்கினார்.


அமோக விளைச்சலை அள்ளித்தருமே

# கிரிப்கோ குருணை யூரியா




கிரிஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிடெட்

KRIBHCO

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை– 600 032.

*சேமிக்க சிறந்த வங்கி !* *பாரம்பரியமிக்க வங்கி!*

SINCE 1920

# புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

## 102 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

நமது வங்கியானது 68ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் தமிழ்நாடு மாநில அளவில் சிறந்த வங்கியாக தேர்வு செய்யப்பட்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டது.

2019 – 20 ஆண்டிற்கான சிறந்த செயல்பாடு மற்றும் வளர்ச்சிக்கான விருது நபார்டு வங்கியின் மூலம் பெறப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட அளவில் அதிக மகளிர் சுய உதவிக் குழு கடன் வழங்கியதற்கான விருது மாவட்ட ஆட்சியர் மூலம் பெறப்பட்டது.

**வங்கியின் மூலம் வழங்கப்படும் சேவைகள்**

- மைய வங்கியில் சேவை (CBS)
- ஏ.டி.எம். சேவை (ATM Debit Card & KCC Card)
- குறுந்தகவல் சேவை (SMS)
- துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT)
- செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking)
- மைக்ரோ ஏ.டி.எம். வங்கிச் சேவை (Micro ATM)
- நடமாடும் ஏ.டி.எம். வாகன சேவை (Mobile Van ATM)
- பொது மக்களின் மதிப்புமிக்க பொருட்களின் பாதுகாப்பிற்கு தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
- அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி
- அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

**தனிநபர் நகைக்கடன் 5 நிமிடத்தில் மாலை 4 மணி வரை, அதிகபட்ச கடன் ரூ. 20.00 இலட்சம், குறைந்த வட்டியில்**

| வைப்புகளுக்கு (Deposits) வழங்கப்படும் வட்டி | |
|---|---|
| பொதுமக்களுக்கு | மூத்தகுடி மக்களுக்கு |
| 6.50% | 7.00% |

## கடன் சேவைகள்

- சுயஉதவிக்குழு கடன்
- மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
- சிறுவணிகக் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- வீடு அடமானக்கடன்
- வீட்டு வசதிக்கடன்
- பணிபுரியும் மகளிர் கடன்
- தனிநபர் சம்பளக்கடன்
- பண்ணை சாராக்கடன்
- MSME கடன்
- கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- டாப்செட்கோ கடன்
- டாம்கோ கடன்
- தாட்கோ கடன்
- அரசின் பல்வேறு திட்டக்கடன்
- பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
- பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில்
பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய காலக் கடன்கள்

**“வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்”**
**இன்றே அணுகுவீர் !! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்**

**மேலாண்மை இயக்குநர்**
**புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,**

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குவது தொடர்பான ஆய்வு



சென்னை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குவது தொடர்பான ஆய்வுக் கூட்டம், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 19.7.2023 அன்று நடைபெற்றது.

இதன் பின்னர் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

“தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்து அதனை செயல்படுத்தியும் வருகிறார். அந்தவகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல் படுத்துவது தொடர்பாக அனைத்து நியாயவிலைக் கடைகளில் இருக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை அவர்களது வீடுகளிலே கொண்டு சேர்க்கும் பணி நடைபெற உள்ளது. முதல்கட்டமாக வருகிற ஜூலை 24ம் தேதி முதல் முகாம்கள் தொடங்க உள்ளன. அதற்கு, முன்னதாக நியாய விலைக்கடை ஊழியர்கள் அதற்கான விண்ணப்பங் களை வீடுகளில் நேரடியாக வழங்கு வார்கள். அப்போது, அந்த விண்ணபத்தை எப்போது ஒப்படைக்க வேண்டும் என்பதை தெரிவிப்பார்கள். இப்பணியானது ஆகஸ்ட் 4ம் தேதி வரை நடைபெறும். இதன் பின்னர், 2வது கட்டமாக ஆகஸ்ட் 5ம் தேதி முதல் மீண்டும் இப்பணி துவங்கும்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பயன் பெறுகின்றனர். முதற்கட்டமாக 60 சதவீதமும் இரண்டாம் கட்டமாக 40 சதவீதமும் செயல்படுத்தவும், சில இடங்களில் 50:50 என்ற விகிதத்திலும், சில இடங்களில் 500 குடும்ப அட்டைகள் உள்ள கடைகளில் முதற் கட்டமும், 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளில் 2ஆம் கட்டமும் என சூழ்நிலைகளுக்கு தகுந்தாற்போல பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலைப் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கும் தாமதமின்றி விண்ணப்பங்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல, விண்ணப்பங்கள் வழங்கும்போது வங்கி கணக்கு இல்லாத பயனாளர்களை வங்கி கணக்கு துவக்க வைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் தற்போது 75 ஆயிரம் முதல் 1 இலட்சம் வரையிலான புதிய வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு 21 இலட்சம் புதிய வங்கி கணக்குகள் தொடங்க வழிவகை செய்யப்படும். பொதுவிநியோகத் திட்டத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் அதற்கேற்ப பணியாளர்களுக்கு பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிகளை கண்காணிக்க மூன்று மாவட்டங்களுக்கு ஒரு கூடுதல் பதிவாளர் என அனைத்து மாவட்டங்களுக்கும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்”.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) முனைவர் ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., உட்பட கூடுதல் பதிவாளர்கள் கலந்து கொண்டனர். ◆

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள்,

## காளையார்கோவில் ஊராட்சி மற்றும் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, மொத்தம் 653 பயனாளிகளுக்கு ரூ.6.05 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



**மா**ண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், காளையார்கோவில் ஊராட்சியில் ரூ.1.44 கோடி மதிப்பீட்டில், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.3.58 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.33.41 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை 16.07.2023 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் துவக்கி வைத்து, மொத்தம் 653 பயனாளிகளுக்கு ரூ.6.05 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்கள் பேசியதாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொது மக்களுக்கு பயனுள்ள வகையில், எண்ணற்ற திட்டங்களை தொலை நோக்கு பார்வையுடன் சிந்தித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி மேம்பாடு, அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்தையும் தமிழகம் முழுவதும் மேம்படுத்தி, அதற்கான திட்டங்களை சிந்தித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு, அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டிய கடமை அரசிற்கு உள்ளது. அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில், மாவட்டத்தின் கடைக்கோடி பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கிவருவது மட்டுமன்றி, அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சிப் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், அவர்களின் தேவையின் அடிப்படையிலும் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமை யிலான தமிழக அரசு அனைத்து துறைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதில், குறிப்பாக கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்திடும் பொருட்டு அத்துறைகளில் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தும், பணியாளர்களின் கூடுதல் தேவை ஆகியவைகளை கருத்தில் கொண்டும் அதற்கான சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழராங்கியம் கிராமத்தில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.16.41 இலட்சம் மதிப்பீட்டில் திருப்புவனம் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இந்நிலையத்தில் இயந்திரங்கள் நிறுவுவதற்கென கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் சார்பில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரங்களும்

நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையம் ஏற்படுத்துவதற்கு அடித்தளமாக நிலம் தானமாக 12 சென்ட் வழங்கிய திரு.சேகர் அவர்களுக்கும் இப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை ஏற்படுத்தி தந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.சேங்கைமாறன் அவர்களுக்கும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மேலும், தற்போது மாவட்ட அளவில் சிறந்து விளங்கி வரும் இச்சங்கம், பால் உற்பத்தியினை மேம்படுத்தி, சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாக மாநில அளவில் சிறந்து விளங்குவதற்குமான சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இதுதவிர, இந்நிகழ்ச்சிகளின் வாயிலாக 653 பயனாளிகளுக்கு ரூ. 6.05 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாகத் தமிழகம் சிறந்து விளங்கி வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி. கோ.ஜினு, நெடுஞ்சாலைத் துறை (நபார்டு (ம) கிராம சாலைகள்) செயற்பொறியாளர் திரு.முரளிதர், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.த.சேங்கைமாறன், ஆவின் பொது மேலாளர் திரு.சேக்முகமதுரபீக், துணைப்பதிவாளர் (பால்வளம்) திரு.செல்வம், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் திரு.மாரிச்சாமி, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி கோ. இராஜேஸ்வரி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.பா. சின்னையா, மானாமதுரை நகர் மன்றத்தலைவர் திரு.மாரியப்பன் கென்னடி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் திருமதி ஆனந்தி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். ◆

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747

mdccbank@rocketmail.com, Post Box No. : 14

E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 44 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 163692.18 இலட்சம்**

**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 217508.62 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% |
| 12 மாதங்கள் முதல் 24 மாதங்கள் வரை | 7.25% |

**60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு கூடுதல் வட்டி 0.50% வழங்கப்படுகிறது.**

### வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 20.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 44 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி
* ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி
* RTGS & NEFT வசதி உள்ளது.
* அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service)
* விரைவில் இணையதள வங்கி சேவை (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம். இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**

**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

**மேலாண்மை இயக்குநர்**

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,**




சென்னையில் நடைபெற்ற 77–ஆவது சுதந்திர தினவிழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'மாற்றுத்திறானளிகளுக்கு சிறப்பான சேவை அளித்த' வகையில், சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியாகத் தேர்வு செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் திரு. சு.மனோகரனிடம் விருது வழங்கப்பட்டது. இவ்விழா முடிவுற்றதும், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. ந. சுப்பையன், இ.ஆ.ப., ஆகியோரிடம் இவ்விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

## டிப்ஸ்

### திப்பிலி

**கா**லை எழுந்ததும் சளி கட்டி வரும் இருமலாகட்டும்; புகை பிடிப்பதால் ஏற்படும் இருமலாகட்டும்; குழந்தைகள் அவதிப்படும் இளம் காசநோயாக இருக்கட்டும் (பிரைமரி காம்ப்ளக்ஸ்) திப்பிலி இருக்க பயம் ஏன் என்று கூறலாம். திப்பிலியை வெற்றிலைச்சாறு, தூதுவளைச் சாறில் பாவனம் செய்து (மூழ்கவைத்துக் காயவைத்தல்) பின் பொடி செய்து வைத்துக்கொண்டு, சிட்டிகை அளவு தேனில் குழைத்துச் சாப்பிட இரண்டு– மூன்று வேளையில் இருமல் மறையும்.


துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை)
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LIMITED. NO. K. 1550
டியூகாஸ் பூச்சிக்கொல்லி மருந்துகள்
கோவை விதைகள்
ஒரே கூரையின் கீழ் அனைத்து இடுபொருட்களும்
TUCAS
விவசாய உபகரணக்கருவிகள்
வங்கிப் பணிகள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள் பயன்படுத்திய பயிர்கள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள்
Tudiyalur Post, Coimbatore - 641 034, TAMILNADU, INDIA
Phone : +91 0422 2642322, +91 0422-2642722, Fax: +91 0422-2642833
Email : tucas_1955@yahoo.co.in, info@tucas.org
Website : www.tucas.org

# செங்கல்பட்டு மாவட்டத்தில் மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தர தொழில்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை, நியாயவிலைக் கடைகள், பல்பொருள் அங்காடி மற்றும் கிடங்கு கட்டட திறப்பு விழா



செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலையின் கட்டடத்தில் இயங்கி வந்த பல்பொருள் சிறப்பங்காடி, 5 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் பிரதான சாலையின் மட்டத்திலிருந்து சுமார் 3 அடி பள்ளத்தில் இருந்ததாலும், மழைக் காலங்களில் நியாயவிலைக் கடைகளுக்குள் மழைநீர் புகுந்து அத்தியாவசியப் பொருட்கள் சேதம் அடைந்து அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலைக்குச் சொந்தமான எண்.40, முதல் பிரதான சாலை, நங்கநல்லூர், சென்னை–600061 என்ற முகவரியில் சர்வே எண்.18/1இல் 2013 சதுர அடியில் பழைய நியாயவிலைக் கடைகள் மற்றும் பல்பொருள் சிறப்பங்காடியினை இடித்துவிட்டு 3 புதிய நியாயவிலைக்



கடைகள், பல்பொருள் சிறப்பங்காடி மற்றும் கிடங்குடன் கூடிய புதிய கட்டடம் ரூ.48.96 இலட்சம் மதிப்பில் கட்ட செங்கல்பட்டு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. இப்பண்டகசாலை குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வந்த நிலையில், மேற்படி பழுதடைந்த கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட போதிய நிதி வசதி பண்டகசாலையில் இல்லாத நிலையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் வட்டியில்லாக் கடனாக நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலைக்கு அனுமதிக்கப்பட்டது.

மேற்படி புதிய கட்டடம் கட்டுவதற்கான பூமி பூஜை 20.06.2022 அன்று மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகையில் முதல் தவணை மற்றும் இரண்டாம் தவணை முறையே 13.12.2022 மற்றும் 21.04.2023 அன்று பெறப்பட்டு இப்பண்டகசாலைக்கு 3 புதிய நியாயவிலைக் கடை கட்டடம், பல்பொருள் சிறப்பங்காடி மற்றும் கிடங்குடன் கூடிய புதிய கட்டடம் தற்போது கட்டி முடிக்கப்பட்டு 14.07.2023 அன்று திறப்பு விழா நடைபெற்றது. இந்த புதிய கட்டடம் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுவதுடன், பண்டகசாலையின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கும்.

இந்நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மண்டல இணைப்பதிவாளர் திருமதி. ம.தமிழ்செல்வி, துணைப் பதிவாளர்கள் திருமதி. ப்பி.ஐஸ்வர்யா, திருமதி. மா.சுடர்மணி, செல்வி. ப்பி. சாவித்திரி, 122வது மண்டல குழுத் தலைவர் திரு. என்.சந்திரன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு சார்பதிவாளர் / செயலாட்சியர் திரு. கோ.பாலாஜி, கூட்டுறவு சார்பதிவாளர்கள், கூட்டுற வாளர்கள், மக்கள் நலப் பிரதிநிதிகள், நங்கநல்லூர் நகர நல சங்கத்தினர், மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். ✤


# ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆய்வு



ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை 10.08.2023 அன்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., பார்வையிட்டு, வேளாண்மை உற்பத்தியாளர் விற்பனைச் சங்கத்தின் மூலப் பொருட்களை மின்னணு முறையில் கொள்முதல் செய்தல் மற்றும் மங்களம் மஞ்சள் தூள், மசாலாப் பொருட்கள் தயாரிப்பு முறையினையும் மஞ்சள் தரம் பிரிக்கும் இயந்திரத்தையும் ஆய்வு மேற்கொண்டு, விற்பனையினை அதிகரிக்க உரிய அறிவுரைகளை வழங்கினார். இவ்வாய்வின்போது ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் மரு.சு.செந்தமிழ்செல்வி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்







திரு.க.ராஜ்குமார், ஈரோடு சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலையின் இணைப் பதிவாளர் / செயலாட்சியர் செல்வி.கே. ரேணுகா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் திரு பா.ரவிச்சந்திரன், ஈரோடு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் திருமதி.கு.நர்மதா, ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைப் பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் திரு. இரா. இராமநாதன், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத் துணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.ச.கணேசன், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர் திரு. சு.மாதேஸ் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர். ✤



மயிலாடுதுறை மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்திற்கு வழங்கப்பட்டு வரும் கோதுமை ரவா, சேமியா, ரவா போன்றவற்றை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., 19.8.2023 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.பி.மகாபாரதி, இ.ஆ.ப., மண்டல இணைப்பதிவாளர் திரு. தயாள விநாயக அமல்ராஜ் ஆகியோர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் தயாரிக்கப்படும் மளிகைப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., 19.8.2023 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.பி.மகாபாரதி, இ.ஆ.ப., மண்டல இணைப்பதிவாளர் திரு. தயாள விநாயக அமல்ராஜ் ஆகியோர் உள்ளனர்.

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்

தொலைபேசி எண்: (04562) 245815

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கை யாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.50% | 3.50% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 5.75% | 5.75% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 6.25% | 6.75% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 5.75% | 6.25% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்

S.K. மயில்சாமி
தலைவர்

பா. செந்தில் குமார்
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்



சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூட்டமன்றத்தில் 10.08.2023 அன்று கூட்டுறவுத்துறை மூலம் கடனுதவி வழங்கும் நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., 4 மாற்றுதிறனாளிகளுக்கு ரூ.2.00 இலட்சம் கடனுதவி வழங்கினார். உடன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திருமதி.இரா.மீராபாய், மண்டல இணைப்பதிவாளர் திரு.ப.இரவிக்குமார், சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் இணைப்பதிவாளர்/செயலாட்சியர் திரு.பொ.பாலமுருகன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.



சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 2022–23ஆம் ஆண்டு இலாபத்தில் செலுத்த வேண்டிய கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி ரூ.32,28,419.00, கூட்டுறவு கல்வி நிதி ரூ.21,52,279.00 என மொத்தம் ரூ.53,80,698.00ற்கான காசோலையினை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., அவர்களிடம் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திருமதி. இரா.மீராபாய் 10.8.2023 அன்று வழங்கினார். உடன், சேலம் மண்டல இணைப்பதிவாளர் திரு. ப.இரவிக்குமார், சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் திரு. பொ.பாலமுருகன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முதன்மை வருவாய் அலுவலர் திரு. ஆர்.ராஜவேலன், சேலம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு சார்பதிவாளர் / செயலாட்சியர் திரு. ம.சி.கமலக்கண்ணன், மேலாளர் திரு. என்.குமார் ஆகியோர் உள்ளனர்.

கூட்டுறவே ! நாட்டுயர்வு!

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

சேரி ரோடு, சேலம் – 636001, தொலைபேசி எண்: 0427 – 2451761–765
Email : slm_sdccbslm@yahoo.co.in & slmsdccb@dataone.in
Website : salemdccbank.com

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்ததற்காக எட்டு முறை தங்கப்பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் பெற்ற வங்கி

**மிகக் குறைந்த வட்டியில் வழங்கும் கடன்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| தனி நபர் நகைக்கடன் | ₹ 2.00 இலட்சம் வரை | 8.50% |
| | ₹ 2.00 முதல் ₹ 20.00 இலட்சம் வரை | 10.50% |
| புதிய வீடு கட்ட கடன் | ₹ 30.00 இலட்சம் வரை | 9.00% |
| வீடு அடமானக் கடன் | ₹ 20.00 இலட்சம் வரை | 10.00% |

| இட்டுவைப்புக் காலம் | வட்டி விகிதம் | |
|---|---|---|
| | பொதுமக்களுக்கு | மூத்த குடிமக்களுக்கு |
| 1 முதல் 2 வருடங்கள் வரையிலான இட்டுவைப்புகளுக்கு | 6.00% | 6.50% |

## வங்கியின் சிறப்பு அம்சங்கள்

- 110 ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் வங்கி
- சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 74 கிளைகளில் வங்கியியல் சேவை
- ரூ.3500 கோடிக்குமேல் இட்டுவைப்பு
- நடைமுறை மூலதனம் ரூ.4397.07 கோடிக்குமேல்
- நவீனமயமாக்கப்பட்ட கிளைகள்.
- ஏ.டி.எம். சேவை
- விரைவான நகைக்கடன் வசதி
- RTGS & NEFT மற்றும் Mobile Banking வசதிகள்
- Micro ATM மூலம் AePS முறையில் பணம் செலுத்துதல் மற்றும் பெறும் வசதி
- இதர வங்கி ATM Card மூலம் பணம் பெறும் வசதி
- குறைந்த வாடகையில் பாதுகாப்புப் பெட்டக வசதி
- சேமிப்புக் கணக்குகள் துவங்குவதில் விரைவான சேவை
- பள்ளி மாணவர்களுக்கு சேமிப்பு கணக்கு சேவை (SSS SB A/C)
- PMSBY/PMJJBY காப்பீட்டுத் திட்ட வசதி
- விரைவான நகைக் கடன் வசதி
- மகளிர் / ஆடவர் சிறுவணிகக் கடன்
- நுகர்வோர் கடன்
- இருசக்கர வாகனக் கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
- பணிபுரியும் மகளிருக்கான கடன்
- கூட்டுப் பொறுப்புக்குழு கடன்
- சம்பளக்கடன்
- மத்திய கால விவசாய கடன் (MT Agri Loan)
- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கடன் (MSME Loan)


கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

தலைவர்

# கடலூரில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவு நிறுவனங்களை ஆய்வு செய்தார்



கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப. 18.08.2023 அன்று கடலூரில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களை ஆய்வு செய்தார். இவ்வாய்வில், நல்லாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், இரண்டாயிரவிளாகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள், கடலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கடலூர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கடலூர் கூட்டுறவு அச்சகம், கடலூர் மாவட்ட சரவணபவ நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, கூட்டுறவு மருந்தகம், நியாயவிலைக்கடை, டாக்டர் எம்ஜிஆர் கூட்டுறவு மேலாண்மை நிலையம், கடலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் மற்றும் சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் ஆகிய



கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் 18.8.2023 அன்று கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் சுயஉதவிக்குழுக்கள், மாற்றுத்திறனாளிகள், நாட்டுப்புற கலைஞர்கள் ஆகியோருக்கு ரூ.132.56 இலட்சம் மதிப்பில் கடன் உதவிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., முன்னிலை வகித்தார். உடன், கடலூர் மண்டல இணைப்பதிவாளர் திரு. வே.நந்தகுமார், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் செயலாட்சியர் திரு. நா.திலீப்குமார் உள்ளனர்.

நிறுவனங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது சங்கத்தின் தானியகிடங்கு, உரக்கிடங்குகளை பார்வையிட்டு, பயிர்க்கடன், நகைக்கடன், பொது சேவை மையம், நெல் அறுவடை இயந்திரம், எண்ணெய் பிழியும் ஆலை, உளுந்து பதனிடும் அலகு ஆகியவற்றை ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார். கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையத்தில் சுயஉதவிக்குழுக்கள், மாற்றுத்திறனாளிகள், நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ. 132.56 இலட்சம் கடன் உதவிகள், வழிசோதனைபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் உறுப்பினருக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பில் சரக்கு வாகன (படே தோஷ்த்) கடன் நல்லாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் உறுப்பினருக்கு மீன் வளர்ப்பு கடனாக ரூ.4.85 இலட்சம் ஆகிய கடன் உதவிகளை பதிவாளர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கடலூர் மண்டல இணைப்பதிவாளர் திரு. வே.நந்தகுமார், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் செயலாட்சியர் திரு. நா. திலீப்குமார், கடலூர் சரகத் துணைப்பதிவாளர் திரு. வி.துரைசாமி, இணைப்பதிவாளர் அலுவலக துணைப் பதிவாளர் திரு. எம்.அன்பரசு, பொது விநியோகத்திட்டத் துணைப்பதிவாளர் திரு. பா.ராஜேந்திரன், மத்திய கூட்டுறவு வங்கியின் முதன்மை வருவாய் அலுவலர் திருமதி. எழில்பாரதி, பொதுமேலாளர் (பொறுப்பு) திரு. டி.பலராமன், துறை அலுவலர்கள், வங்கி அலுவலர்கள், சங்க பணியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ✤

# தூத்துக்குடி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் சங்கங்களை கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) ஆய்வு




**தூ**த்துக்குடி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறைகளின் சார்பில் இயங்கிவரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடி, கூட்டுறவு மருந்தகம், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், நியாயவிலைக் கடைகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களை நுகர்வோர் பணிகளுக்கான கூடுதல் பதிவாளரான திருமதி. விஜயராணி, இ.ஆ.ப., 19.8.2023 அன்று நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர் கூட்டுறவு நிறுவனம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிட அறிவுரை வழங்கினார். இதைத் தொடர்ந்து தூத்துக்குடி வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் நடத்தப்படடு வரும் டுவிபுரம் நியாயவிலைக் கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மேலும் புகார்கள் ஏதுமின்றி விற்பனை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.



மேலும் மதுரா கோட்ஸ் கூட்டுறவு பண்டகசாலை அங்காடியில் ஆய்வு மேற்கொண்ட கூடுதல் பதிவாளர் திருமதி. விஜயராணி, இ.ஆ.ப., விற்பனையை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கை களை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுரை கூறினார்.

ஆய்வின்போது தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் / செயலாட்சியர் திரு. நடுக்காட்டுராஜா, பொதுவிநியோகத் திட்டத்தின் துணைப்பதிவாளர் திரு. மாரியப்பன், தூத்துக்குடி சரகத் துணைப்பதிவாளர் திரு.ரவீந்திரன், திருச்செந்தூர் சரகத் துணைப்பதிவாளர் திருமதி. சந்திரா மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், சங்கப் பணியாளர்கள் உள்ளனர். ✤



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., 22.8.2023 அன்று மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாய விலைக்கடைகளில் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் காலிப்பணியிடங்களை நிரப்பிட தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாற்றுத்திறனாளி விற்பனையாளர்கள் மற்றும் 18 மாற்றுத்திறனாளி கட்டுநர்களுக்கு பணியமர்வு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி. சங்கீதா, மண்டல இணைப்பதிவாளர் திருமதி. ப.ஜெயஸ்ரீ, துணைப்பதிவாளர் (பொ.வி.தி.) திரு.மணி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திரு. கோ.க.மாதவன் தலைமையில் திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி, கூட்டுறவுக் கல்வி நிதி வசூல், வட்டியில்லாக் கடன் வசூல் குறித்தும் மற்றும் கூட்டுறவு மேலாண்மை நிலைய பயிற்சி குறித்தும் ஆய்வுக்கூட்டம் 11.08.2023 அன்று நடைபெற்றது. இவ்வாய்வின்போது, இலாபத்தில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி ரூ.9.25 இலட்சம் மற்றும் கல்விநிதி ரூ. 6.17 இலட்சம் ஆகமொத்தம் ரூ.15.42 இலட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளர் / செயலாட்சியரிடம் திருநெல்வேலி மண்டல இணைப்பதிவாளர் திரு. ஏ.அழகிரி வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படும் 12 கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு யுபிஐ (UPI) மூலம் பணபரிமாற்றத்திற்கு கியூஆர் குறியீடு (QR Code) அட்டைகளை நியாயவிலைக் கடை பணியாளர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் திருமதி. எம்.உமாமகேஸ்வரி, திருநெல்வேலி சரகத் துணைப்பதிவாளர் திரு. மோ.முத்துசாமி, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு. த.வின்சென்ட் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



மின்அஞ்சல்: ncmsooty@gmail.com
போன்: 2442339, 2443975, 2443028

# நீலகிரி கூட்டுறவு
# விற்பனைச் சங்கம் லிமிடெட்

**நெ.கே.708,**
**செயிலிங் ஹவுஸ், உதகமண்டலம்**


எங்களது நிறுவனம், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நல்ல நண்பனாக, நல்லதொரு வழிகாட்டியாக செயலாற்றி வருகிறது.

- **86 வருடங்களாக நீலகிரி விவசாயிகளின் நம்பிக்கை பெற்ற நிறுவனம்.**
- **நீலகிரி விவசாயிகளுக்கு தரமான கலப்பு உரங்கள் உரக்கலவை இயந்திரங்கள் மூலம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.**
- **தரமான விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்கள் மற்றும் வேளாண் கருவிகள் - விநியோகம்**
- **கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உலகப்புகழ் பெற்ற உருளைக்கிழங்கு ஏல விற்பனை மையம்**
- **மேட்டுப்பாளையம் கிளையில் உறுப்பினர்கள் நலன் கருதி தங்கும் விடுதி**
- **உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் உடனடியாக நகைக்கடன்**
- **உதகை மற்றும் கூடலூரில் சமையல் எரிவாயு விநியோகம்**
- **உதகையில் விவசாயிகளின் மலைக்காய்கறிகள் ஏல விற்பனை மையம்**
- **உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி உதகையின் மையப்பகுதியில் 60 டன் எடைகொண்ட கணினி எடைமேடை**
- **உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி உதகை மற்றும் கோத்தகிரியில் இரண்டு கல்யாண மண்டபங்கள் செயல்பட்டு வருகிறது.**









| **திரு. எஸ்.ஜயப்பன்** | **திரு. என்.ராமன்** | **திரு வெ.தமிழ்ச்செல்வன்,** M.A., M.Phil., |
|---|---|---|
| கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாளர் | துணைத்தலைவர் (தலைவர் பொறுப்பு) | துணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் |

# தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள்

✤ திருமதி. வி.பு.சாந்தி,
திருமதி. இ.வீ.விஜயலட்சுமி,
திரு. ஆ.யுவராஜா,



**நாற்றுகளை தேர்வு செய்தல்**

சாதராணமாக ஒரு வருட வயதுள்ள நாற்றுகளை நடுவதற்குத் தேர்வு செய்ய வேண்டும். இவ்வாறு தேர்வு செய்யும் நாற்றுகள் விரைவான மற்றும் வீரிய வளர்ச்சி உடையதாகவும், குறைந்தது ஆறு இலைகளை கொண்டதாகவும், விரைவாக இலைகள் விரியும் தன்மை உடையதாகவும், 10 முதல் 12 செ.மீ. தடிமனுடைய தண்டினை உடையதாகவும் இருக்க வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் 1 முதல் 2 வருடங்கள் வயதுடைய நாற்றுகளை நட வேண்டும்.

**நடவும் பராமரிப்பும்**

கன்றுகளை நடுமுன் நிலத்தில் உள்ள மரம் மற்றும் செடிகளை வெட்டி அப்புறப்படுத்தி நடுவதற்கு முன் நிலத்தை சமன் செய்ய வேண்டும். சதுப்பு நிலங்களில் தண்ணீர் தேங்காமலிருக்க மண் குவியல் குன்றுகளைத் தயார் செய்ய வேண்டும். நடவு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தில்

✤ வேளாண்மை அறிவியல் மையம் வம்பன், புதுக்கோட்டை

உள்ள களைகளை அகற்ற வேண்டும். மண் சரிவாகவும் கடினமாகவும் இருந்தால் மழைக்காலத்தில் மேற்பரப்பில் உள்ள மண்ணை கரைத்துக் கொண்டு செல்லும். அதனை தவிர்க்க குறுக்கு வரப்பு அமைத்தல் சமநிலைப் படுத்துதல் போன்ற பணிகளை கவனம் பெற செய்ய வேண்டும்.

**இடைவெளி**

ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் போதுமான அளவு சூரிய ஒளி, தண்ணீர், ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதற்கு 7.5 மீ x 7 மீ அடி இடைவெளி விட்டு மரத்தை நட வேண்டும்.

**குழிகளின் அளவு**

குழிகளின் அளவு மண்ணின் தன்மைக்கேற்ப மாறுபட்டாலும் பொதுவாக 3 x 3 x 3 அடி (1 x 1 x 1 மீட்டர்) அளவுடைய குழி பரிந்துரை செய்யப் படுகின்றது. குழிகளை எடுத்த பின்பு 2 அடி வரை மக்கிய உரத்துடன் மேல் மண் அல்லது செம்மண் கலந்து நிரப்ப வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் மேடைப்பாத்தி அமைத்து நட வேண்டும். இதிலும் குழிகளை எடுத்து மேல் மண்ணைக் கொண்டு 2 அடி அகலத்திற்கு நிரப்ப வேண்டும். இரண்டு அடுக்கு தென்னை உரிமட்டையை குழியின் அடிப்பாகத்தில் நிரப்பி தண்ணீரை சேமிக்க பயன்படுத்தலாம். கடினமான மண்ணில் 2 கிலோ சோற்று உப்பை இட்டு மண்ணை இளக்க பயன்படுத்தலாம்.

**தென்னையில் உர மேலாண்மை**

தென்னை ஒரு பல்லாண்டுப் பயிர். மாதம் ஓர் இலை வீதம் உற்பத்தி செய்யவல்லது. பூ பூக்க ஆரம்பித்தவுடன் மாதத்திற்கு ஒரு முறை பூவை உற்பத்தி செய்யும். எனவே ஊட்டச் சத்தானது தென்னைக்கு வருடம் முழுவதும் தங்கு தடையின்றி தேவைப்படுகின்றது. ஊட்டச்சத்து நிர்வாகமானது மண்ணின் வளம், காலநிலை, நீர்ப்பாசனம் போன்ற காரணங்களால் இடத்திற்கிடம் மாறுபடுகின்றது. மத்திய பண்ணை பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பொதுவாக பரிந்துரையாக ஒரு மரத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு 500 கிராம் தழைச்சத்து (1100 கிராம் யூரியா), 320 கிராம் மணிச்சத்து (2 கிலோ சூப்பர் பாஸ்பேட்) மற்றும் 1200 கிராம் சாம்பல் சத்து (2 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்) பரிந்துரை செய்யப் படுகின்றது. முதன் முறையாக நட்ட மூன்று மாதங்கள் கழித்து பரிந்துரைக்கப்பட்ட அளவில் பத்தில் ஒரு பங்கையும் இரண்டாவது வருடம் மூன்றில் ஒரு பங்கையும் இரண்டாவது வருடம் மூன்றில் ஒரு பங்கையும் மூன்றாவது வருடத்தில் மூன்றில் இரண்டு பங்கையும் நான்காவது வருடத்திலிருந்து முழுமையான அளவையும் இட வேண்டும் (அட்டவணை). நீர்ப்பாசன வசதி குறைவான இடங்களில் மேற்குறிப்பிட்டளவில் உரத்தை 2 ஆக பிரித்து மூன்றில் ஒரு பங்கை பருவ மழை முடியும் தருவாயில் இட வேண்டும். நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் வேலையாட்கள் கிடைக்கும் வசதியை மனதில் கொண்டு வருடத்திற்கு 3 முதல் தடவைகளாக உரத்தைப் பிரித்து மரத்திற்கு இடலாம்.

**நீர் மேலாண்மை**

தென்னையின் கொண்டைப் பகுதி யில் உள்ள மட்டைகள், தென்னங் குலைகள் திடகாத்திரமாக இருக்கவும், இரசாயன மாற்றங்கள் நடந்திடவும், வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்கவும், ஒளிச்சேர்க்கை நடைபெறவும், தேவையான பயிர் சத்துக்களை மண்ணிலிருந்து கரைந்த நிலையில் கிரகித்துக் கொள்ளவும்

தண்ணீர் இன்றியமையாததாகிறது. ஆகவே கோடைக்காலத்திலும் மழை இல்லாத காலங்களிலும் நீர்ப்பாசனம் அவசியம் தேவை.

**வட்டப்பாத்தி முறை**

நீர் உபயோகத் திறனை அதிகாரிக்க, தென்னை மரத்தைச் சுற்றி 6 அடி ஆழத்தில் வட்டப்பாத்திகள் அமைத்து நீர் கட்டும் முறை சமதளம் உள்ள நிலங்களுக்கு ஏற்றது.

**சொட்டுநீர் பாசனம்**

தென்னையில் சொட்டு நீர் பாசன முறையை சரியாக கடைப்பிடித்தால், வறட்சி காலங்களில் நல்ல பயன்களை பெறலாம். தென்னையை சுற்றிலும் 1 மீ. தூரத்தில் 1 அடி x 1 அடி x 1 அடி என்ற அளவில் குழி எடுத்து அதில் தேங்காய் நார் அல்லது நார்க்கழிவு பொடி போன்றவற்றை நிரப்ப வேண்டும். பின்னர் சொட்டு நீரை ஒரு சிறிய குழாயின் (ஒரு மரத்திற்கு 4 சிறிய குழாய்கள்) மூலம் 30 செ.மீ ஆழத்தில் சொட்டுமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் செலுத்தும் எல்லா நீரும் மரத்திற்கே போய் சேரும். சாதரணமாக ஒரு மணி நேரத்திற்கு 2 லிட்டர் முதல் 4 லிட்டர் வரை நீர் கொடுக்கலாம். ஒரு நாளைக்கு 35 லிட்டர் முதல் 75 லிட்டர் வரை (மண்ணின் தன்மை, தட்பவெப்ப நிலை, தென்னையின் வளர்ச்சி பருவம் ஆகியவற்றை அனுசரித்து) கொடுக்கலாம். நீர் மிகக்குறைவாக இருக்கும் பட்சத்தில் மரத்தைக் காப்பாற்ற, சொட்டு நீரை மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை கொடுத்தாலும் போதுமானது.

**நோய்கள்**

**காண்டாமிருக வண்டு (ஒரைக்டஸ்ரய்நாசுராஸ்)**

கருமை நிறத்துடன் தலையில் சிறிய கொம்பினை கொண்ட இவ்வாண்டு விரியாத குருத்து பகுதியையும், பாளையையும் துளையிடுகின்றது. துளையிடப்பட்ட ஓலைகள் விரியும்போது ஆங்கில எழுத்தான 'ஏ' போன்ற வெட்டுக்கள் காணப்படும். இலைகளுக்கு சேதம் ஏற்படுத்துவதால் மரத்திற்கு உணவு தயாரிக்க உதவும் பச்சையத்தின் அளவு குறைகிறது. சேதமடைந்த ஓலைகள் வேய்வதற்கு பயனற்றதாகி விடுகிறது. பாளைக்கு ஏற்படும் சேதம் விளைச்சலை நேரடியாகப் பாதிக்கின்றது. இவ்வண்டு களின் தாக்குதலுக்குபின் இலை அழுகல் குருத்தழுகல் மற்றும் சிவப்பு கூண்வண்டு ஆகியவற்றின் தாக்குதல் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைகிறது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

ஒரு மரத்திற்கு 50 கிராம் பொடியாக்கப்பட்ட வேப்பங்கொட்டையை 100 கிராம் மணலுடன் கலந்து ஒரு மட்டை இடுக்கிற்கு 50 கிராம் கலவை என்றளவில் நடுக்குருத்தில் மூன்று மட்டை இடுக்குகளிலும் இடவும்.

**சிவப்பு கூண்வண்டு**

சிவப்பு கூண் வண்டுகள் தென்னை, எண்ணெய்ப்பனை மற்றும் ஈச்சம் பனை மரங்களைத் தாக்குகின்றன. இலை அழுகல், குருத்தழுகல் மற்றும் காண்டாமிருக வண்டு தாக்கிய மரங்களில் இவற்றின் பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. இதனுடைய புழுக்கள் மரத் தண்டுகளின் உட்பகுதியில் உள்ள திசுக்களை உட்கொள்கின்றன. இதனால்

மரத்திலிருந்து ஆழ்பழுப்பு நிறமுடைய திரவம் வடிகிறது. இவ்வண்டுகளின் தாக்குதல் முற்றிய நிலையில் தாக்கப்பட்ட மரத்தின் குருத்துப்பகுதி சாய்ந்து விடுகின்றது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

தென்னையின் தலைப்பகுதியில் கூண் வண்டு தாக்குதல் காணப்பட்டால், தலைப்பகுதியை சுத்தம் செய்து விட்டு பூச்சி மருந்தைத் தெளிக்க வேண்டும். மரங்களில் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். தண்டுப்பகுதியில் காணப்படும் துளைகளில், உச்சியிலுள்ள ஒரு துளையை மட்டும் விட்டுவிட்டு, இதர துளைகள் எல்லாம் களிமண் கொண்டு அடைத்துவிட வேண்டும். உச்சியிலுள்ள துளையினுள் 1 கார்பாரில் மருந்து கரைசலை (ஒரு லிட்டர் நீரில் 20 கிராம் கார்பாரில் கரைக்கவும்) ஊற்ற வேண்டும். உச்சியிலுள்ள துளையிலிருந்து பூச்சி மருந்துக் கரைசல் நிரம்பி வழியும் வரையில் ஊற்ற வேண்டும். பின்னர் அந்தத் துளையையும் களிமண் கொண்டு அடைத்து விட வேண்டும்.

**ஈரியோபைட் மைட் அல்லது சிலந்திப் பூச்சி**

ஈரியோபைட் சிலந்திகள் இளம் குரும்பைகள் மற்றும் இளங்காய்களின் அடியில் உள்ள மென்மையான திசுக்களிலிருந்து சாற்றை உரிஞ்சி வாழ்வதால் குப்பிக்கு கீழே முக்கோண வடிவில் வெளிர் மஞ்சள் அல்லது பழுப்பு நிற தட்டுக்கள் காணப்படும். பாதிக்கப்பட்ட குரும்பைகள் முதிர்ந்து இளம் காய்களாக மாறும்போது பழுப்பு நிறப் பகுதியின் அளவு மேலும் அதிகமாகி நீளவாக்கில் சிறுசிறு வெடிப்புகள் தோன்றும். இதனால் தேங்காய் மட்டையின் நார் பகுதிகள் கடினமானதாகி விடுகின்றன. மேலும் தேங்காயின் அளவு சிறுத்து பருப்பின் அளவும் குறைந்து விடுகிறது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

5 + அஸாா்டிரக்டின் கொண்ட வேப்ப மருந்தை 7.5 மி.லி எடுத்து அதை 7.5 மி.லி. தண்ணீரில் கலந்து வோ் மூலம் செலுத்த வேண்டும். வேப்பெண்ணெய் + வெள்ளை பூண்டு + சோப்பு கலவையின் 2 சதவிகித கரைசலைக் குரும்பைகள் மீது தெளிக்க வேண்டும்.

**குருத்து அழுகல் நோய்**

**நோயின் அறிகுறிகள்**

நோய் தாக்கிய குருத்து மற்றும் குருத்தைச் சுற்றியுள்ள நோய் பாதிக்கப்பட்ட எல்லா மட்டைகளையும் அடியிலிருந்து வெட்டி அகற்றி எரித்து விட வேண்டும். பத்து சதவீத போர்டோ பசையைத் தயாரித்து வெட்டிய பாகங்களில் பூச வேண்டும். பின்னர் பாலித்தீன் பை அல்லது அகல வாய் கொண்ட பானையைக் கொண்டு குருத்து பாகத்தை மூடிவிட வேண்டும். தோப்பில் உள்ள எல்லா மரங்களுக்கும் குருத்து மற்றும் இளம் இலைப் பாகங்கள் நன்கு நனையுமாறு ஒரு சதவீத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

**அடித்தண்டு அழுகல், தஞ்சாவூர் வாடல், கேனோடெர்மா நோய்**

**கட்டுப்படுத்தும் முறைகள்**

நோயின் காரணி கேனோடெர்மா லுசிடம் என்ற பூஞ்சை.

நோய் தாக்கிய மரங்களை உடனுக்குடன் வேருடன் வெட்டி எரித்து விட வேண்டும். நோய்வாய்ப்பட்ட தென்னைகளுக்கு தனியாக பாசனம் செய்ய வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இடுவதோடு ஒவ்வொரு மரத்திற்கும் ஐந்து கிலோ வேப்பம் புண்ணாக்கும் இட வேண்டும். ✤




# மன அழுத்தம் போக்கும் மருந்து – கொடுக்காய்ப்புளி

**கொ**டுக்காய்ப்புளி என்றவுடன் பள்ளிப்பருவத்தில் விடுமுறை நாட்களில் கொடிக்காய் மரத்தில் ஏறி கொடிக்காயைப் பறித்து உண்டதே என் நினைவிற்கு வருகிறது.

இது கொடிக்காய், கொடுக்காய்ப்புளி, சுரட்டிக்காய், கோக்காய், சீனிப்புளியங்காய் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. வட இந்தியாவில் ஜங்கில் ஜிலேபி (Jungle Jalebi vilayati imli) என்றும் ஆங்கிலத்தில் மணிலா டாமரிண்ட் (Manila Tamarind) என்றும் அழைக்கின்றனர்.

அன்றைக்கு எளிதாக விலை யில்லாமல் கிடைத்த இக்காய் இன்றைக்கு அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

இதற்கு காரணம் இதனுடைய உடல்நல மேம்பாட்டு நன்மைகள் மற்றும் இக்காயைச் சந்தைப்படுத்துதல் ஆகியவை ஆகும்.

கொடி போன்று சுருண்டு காணப்படுவதால் கொடிக்காய் என்றும் புளியைப் போன்று விதையைச் சுற்றிலும் சதைப்பகுதியைக் கொண்டிருப்பதால் கொடுக்காய்ப்புளி என்றும் அழைக்கப்படு கிறது.

சுரட்டியைக் கொண்டு பறிக்கப்படுவ தால் இது சுரட்டிக்காய் என்றும், கோணலாக வளைந்து நெளிந்து காணப்படுவதால் கோணக்காய் என்றும் வழங்கப்படுகிறது.

**கொடுக்காய்ப்புளியின் வரலாறு**

கொடுக்காய்ப்புளியின் தாயகம் தெற்கு மெக்ஸிகோ மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா ஆகும்.

1705 ல் ஐரோப்பியர்கள் இந்தியாவிற் கான வழியைக் கண்டுபிடித்த போது இந்திய கடற்கரையில் இம்மரத்தினைக் கண்டு இக்காயானது இந்தியாவைத் தாயகமாகக் கொண்டதாகக் கருதினர். அதனால் இதனை சென்னை முள் என்று அழைத்தனர்.

1650களில் இப்பழத்தினை ஸ்பானியர்கள் பிலிபைன்சிற்கு அறிமுகப் படுத்தினர். பிலிப்பைன்சிலிருந்து இது ஏனைய ஆசிய நாடுகளுக்குப் பரவியது.



இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம், டெல்லி ஆகிய இடங்களில் காணப்படுகிறது.

**கொடிக்காய்ப்புளி மரம்**

இது வேகமாக வளரும் இயல்புடையது. சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது 56 வருடங்களில் 10 மீ உயரம் வரை வளரும்.

இம்மரமானது உப்பான மண், மலை மண் உட்பட எல்லா வகை மண்ணிலும் செழித்து வளரும் இயல்பினைக் கொண்டுள்ளது.

இது வறட்சியைத் தாங்கி வளரும் இயல்புடையது. இது 5 டிகிரி செல்சியஸ் முதல் 40 டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தைத் தாங்கி வளரும். குளிர்ச்சியான, தொடர்ந்த ஈரப்பதமான மண்ணில் இதனால் வாழ இயலாது

**ஊட்டச்சத்துக்கள்**

கொடுக்காய்ப்புளியில் வைட்டமின் ஏ, சி, பி1 (தயாமின்) பி2 (ரிபோஃப்ளோவின்), பி6 (நியாசின்) ஆகியவை உள்ளன.

மேலும், இதில் தாது உப்புக்களான கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம் ஆகியவை காணப்படுகின்றன.

இக்காயில் நீர்ச்சத்து, நார்ச்சத்து, புரதச்சத்து, கார்போஹைட்ரேட் ஆகியவையும் காணப்படுகின்றன.

**மருத்துவப் பண்புகள்**

கொடுக்காய்ப்புளியின் சதைப் பகுதி, இலை, பட்டை, பூ ஆகியவை மருந்துப் பொருளாக உபயோகிக்கப்படுகின்றன.

**மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற**

இக்காயில் உள்ள வைட்டமின் பி1 (தயாமின்) னானது மூளை மற்றும்

நரம்புகளின் வளர்ச்சியை ஊக்குவித்து அவை நன்கு செயல்பட உதவுகின்றன.

மேலும் வைட்டமின் பி1 னானது மனஅழுத்தம் ஏற்படாமலும் நம்மைப் பாதுகாக்கிறது. எனவே, இதனை உண்டு, மூளை மற்றும் நரம்புகளின் ஆரோக்கியத்தை பெறலாம்.

**சரும, கேசப் பராமரிப்பிற்கு**

இதில் உள்ள வைட்டமின் பி2 (ரிபோஃப்ளோவின்) சருமம், கேசம், நகங்கள் நன்கு வளரவும், அவற்றை ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

மேலும், இதில் உள்ள வைட்டமின் சி ஆனது சருமத்தை விரைவில் முதுமை அடையாமல் பாதுகாக்கிறது. எனவே, இக்காயினை உண்டு சருமம், கேசம், நகங்களின் அழகினைப் பாதுகாக்கலாம்.

**நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெற**

இதில் உள்ள வைட்டமின் சி–யானது ஆன்டி ஆக்ஸிடென்டாகச் செயல்படு வதுடன் உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்பாற்றலையும் வழங்குகிறது. எனவே, இப்பழத்தினை உண்டு நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெறலாம்.

**எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு**

இப்பழத்தில் காணப்படும் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் பற்கள் மற்றும் எலும்புகளை சேதமுறாமல் பாதுகாத்து அவற்றை வலுவாக்குகின்றன. மேலும் இம்மரத்தின் பூவானது பல்வலி, ஈறுகளின் பிரச்சினைக்கும் தீர்வளிக்கிறது.

**கல்லீரல் பாதுகாப்பிற்கு**

இப்பழத்தினை உண்ணும் போது இதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடெண்டுகள் ஆக்ஸிஜனேற்றத்தால் கல்லீரல் பாதிப்படையாமல் பாதுகாப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே இப்பழத்தினை உண்டு கல்லீரல் பாதுகாப்பை பெறலாம்.

**செரிமானத்திற்கு**

இப்பழத்தில் உள்ள நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்தானது செரிமானம் நன்கு நடைபெற உதவுகிறது. மேலும் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றவும், உணவில் உள்ள சத்துக்களை உறிஞ்சவும் இவை உதவுகின்றன.

மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு, வாய்ப்புண், அல்சர் போன்ற செரிமானம் சம்பந்தமான நோய்களையும் நார்ச்சத்து ஏற்படாமல் தடுக்கிறது.

கொடுக்காய்ப்புளியினை மூன்று நாட்கள் அறையின் வெப்பநிலையில் வைத்திருந்து பயன்படுத்தலாம். இதனைப் பயன்படுத்தி சட்னி, சூப்புகள், சாலட் உள்ளிட்டவை தயார் செய்ய பயன்படுத்தப் படுகிறது.

சத்துக்கள் நிறைந்த மன அழுத்தம் போக்கும் கொடுக்காய்ப்புளியினை உண்டு வளமான வாழ்வு வாழ்வோம்.

நன்றி ; குலமுரசு




தஞ்சாவூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் செயல் எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுதல் மற்றும் சங்கங்களை கணினிமயமாக்குதல் குறித்த சங்கச் செயலாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சியினை தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திரு. எம்.அந்தோணிசாமி ஜான் பீட்டர் 1.8.2023 அன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தஞ்சாவூர் மண்டல இணைப்பதிவாளர் திருமதி. சி.தமிழ் நங்கை, தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர்/ செயலாட்சியர் திருமதி. ஜெ.பழனீஸ்வரி, திருவாரூர் மண்டல இணைப்பதிவாளர் திருமதி. க.சித்ரா, மயிலாடுதுறை மண்டல இணைப்பதிவாளர் திரு. அ.தயாளவிநாயகன் அமுல்ராஜ், தஞ்சாவூர் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் திரு. சௌ.அப்துல் மஜீத், பட்டுக்கோட்டை சரகத் துணைப்பதிவாளர் திரு. சுகி.சாமிநாதன், திருவாரூர் சரகத் துணைப்பதிவாளர் திரு. வை.கார்த்திகேயன், மன்னார்குடி சரகத் துணைப்பதிவாளர் திரு. சி.ராமசுப்பு மற்றும் தஞ்சாவூர் பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் திரு. சா.கருப்பையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

*திராட்சையை தினமும் சாப்பிட்டு வந்தால் எலும்புகள், பற்கள் கெட்டிப்படும். மேலும், இருதயம் பலப்படும். திராட்சை பல நிறங்களில் கிடைக்கிறது. இது வெள்ளை, வெளிர்பச்சை, கருஞ்சிவப்பு, ஊதா அல்லது கறுப்பு என பல நிறத்தில் இருக்கும். சில வகைகளில் விதைகள் இருக்காது. அனைத்து வகை திராட்சைகளும் உடல் நலத்திற்கு மிக மிக நல்லது.*

# தென்னையில் இலாபகரமான ஊடுபயிர்– அன்னாசிப் பழம் சாகுபடிக் குறிப்புகள்

✤ ம.தமிழ்ச்செல்வன்,
✤✤ கு.பஞ்சவர்ணம் மற்றும்
✤✤✤ மு.அழகர்
✤✤✤✤ வி.பு.சாந்தி

**முன்னுரை**

✤ புரோமிலியேசியே குடும்பத்தைச் சார்ந்த அன்னாசிப் பழம் தாவரவியல் பெயர் 'அனானாஸ் கோமோசஸ்' ஆகும்.

✤ இதன் தாயகம் வெப்ப மண்டல அமெரிக்கா (பிரேசில்).

✤ அன்னாசியில் உள்ள "புரோமிலின்" எனப்படும் வேதிப்பொருள் இதன் மணத்திற்கு காரணமாக உள்ளது.

**குரோமோசோம் எண்: 2n = 50**

**இரகங்கள்**

✤ கியூ, குயின் மற்றும் மரீஷியஸ்

**பருவம்**

✤ ஜூலை முதல் செப்டம்பர் வரை.

**மண் மற்றும் தட்பவெப்பநிலை**

✤ தட்பவெப்ப நிலையைப் பொறுத்த வரை மிதவெப்பமான மலைப்பகுதி மிகவும் ஏற்றது.

✤ கடல் மட்டத்திலிருந்து 500 மீட்டர் முதல் 700 மீட்டர் வரை நன்கு வளரும்.

✤ மண்ணின் கார அமிலத் தன்மை 5.5 முதல் 7.0 வரை மிகவும் ஏற்றவை. களிமண் பூமியாக இருப்பின், நல்ல வடிகால் வசதி இருந்தால் பயிர் செய்யலாம்.

**பயிர்ப் பெருக்கம்**

✤ பக்க கன்றுகள், கொண்டைகள், மேல் கன்றுகள், நடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன;

✤ இவற்றில், பக்க கன்றுகள் தான் பெரும்பாலும் நடவிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**இடைவெளி மற்றும் நடவு**

✤ இரட்டை வரிசை முறையில் நாற்றுக்களை நடவு செய்யலாம்.

✤ கன்றுகளுக்கு இடையில் உள்ள இடைவெளி 30 செ.மீ ஆகவும்

✤ வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை – 614 602, தஞ்சாவூர் மாவட்டம்
✤✤ மத்திய மலைத் தோட்டப்பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், காசர்கோடு, கேரளா–671 124
✤✤✤ பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்–641 003
✤✤✤✤ வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன், புதுக்கோட்டை–622 303

வரிசைகளுக்கு இடையிலுள்ள தூரம் 60 செ.மீ ஆகவும் இரண்டு வரிசைகளுக்கு இடையிலுள்ள தூரம் 90 செ.மீ ஆகவும் இருக்கும்படி நட வேண்டும்.

- ✤ சுமார் 300 முதல் 350 கிராம் எடையுள்ள கன்றுகளை தேர்வு செய்து நடவேண்டும்.
- ✤ கன்றுகளை வயலில் நடுவதற்கு முன்பு மேன்கோசெப் 3 சதம் அல்லது கார்பெண்டாசிம் ஒரு சத சலவையில் சுமார் ஐந்து நிமிடங்கள் முக்கி நட வேண்டும்.




மேல் கன்றுகள் கொண்டைகள் பக்க கன்றுகள்

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை**

- ✤ ஒரு எக்டருக்கு தொழு உரம் 40 முதல் 50 டன் இடவேண்டும்; பின்பு செடி ஒன்றிற்கு யூரியா 16 கிராம் சூப்பர் பாஸ்பேட் 4 கிராம் மியூரேட் ஆப் பொட்டாஷ் 12 கிராம் என்ற அளவில் இரு சமமாகப் பிரித்து கன்று நட்ட ஆறாவது மாதம் ஒரு முறையும் பன்னிரெண்டாவது மாதம் ஒரு முறையும் இடவேண்டும்.

**நுண்ணூட்டச்சத்துக் குறைபாடுகள்**

- ✤ அன்னாசியில் இரும்புச்சத்து குறைபாடு, துத்தநாகக் குறைபாடு மயில் துத்தக் குறைபாடுகள் காணப்படும்.
- ✤ இவற்றைப் போக்க இலைவழி ஊட்டச் சத்தாக 0.5 சதம் முதல் 1.0 சத துத்தநாக சல்பேட் கரைசல் (சிங்க் சல்பேட்) மற்றும் ஃபெரஸ் சல்பேட் கரைசலை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

**களை கட்டுப்பாடு மற்றும் பின்செய் நேர்த்தி**

- ✤ அன்னாசியில் பூக்கள் சீராகப் பூப்பதற்கு, செடியில் 35 முதல் 40 இலைகள் இருக்கும்போது நாப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA) 10 பிபிஎம் கரைசலை 2 சத யூரியா கரைசலுடன் கலந்து செடிக்கு 50 மில்லி என்ற விகிதத்தில் குருத்தில் ஊற்றவேண்டும் (அல்லது) 20 பிபிஎம் எத்ரலுடன் 2 சத யூரியா மற்றும் 0.04 சத சோடியம் கார்பனேட்டை கலந்து செடிக்கு 50 மில்லி என்ற விகிதத்தில் இட வேண்டும்.
- ✤ பழத்தின் எடையை அதிகரிக்க 200 – 300 பிபிஎம் நாப்தலின் அசிட்டிக் அமிலம் கரைசலை காய்பிடித்து இரண்டு மூன்று மாதங்களுக்குள் தெளிக்க




வேண்டும்; இதனால் 12 20 சதம் வரை பழங்கள் பெரியதாகும்.

**மண் அணைத்தல்**

- செடிகளுக்கு மண் அணைப்பது மிகவும் முக்கியமாகும். குறிப்பாக மறுதாம்புப் பயிருக்கு மிகவும் அவசியம்.
- ஒவ்வொரு முறை உரமிடும் பொழுதும், அறுவடை முடித்த பின்பும் செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.
- பழத்தின் பருமனை அதிகரிக்க காய்பிடித்து ஒன்றிரண்டு மாதங் களில் கொண்டையின் குருத்தைக் கிள்ளி எடுத்துவிடவேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு**

**மாவுப்பூச்சி**

- நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட ரெட் ஸ்பானிஷ், குயின் போன்ற இரகங்களை சாகுபடி செய்ய வேண்டும்.
- பூச்சிகளைக் கட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் அல்லது மோனோகுரோட்டோபாஸ் இரண்டு மில்லி தெளிக்க வேண்டும்.

**காண்டா மிருக வண்டு**

- மரத்தின் அடிப்பகுதியில் இருந்து புழுக்களை இரும்புகோல் கொண்டு குடைந்து வெளியே எடுக்க வேண்டும்.
- இலை விழுங்கிகளான பினேட்டி– மேரிஸ் கொலிஸ் தோட்டத்தில் விடுவதன் மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.
- கார்பரில் 0.1 சத மருந்தை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தெளிக்க லாம்.
- மாலத்தியான் மருந்தை 5 சதம் என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்த லாம்.

**நோய்கள்**

**இலை மற்றும் பழம் அழுகல் நோய்**

- பயிரிடப்படும் நாற்றுக்களை 0.3 % டைத்தேன் Z – 78 கரைசலில் முக்கி எடுக்க வேண்டும் (அ) இலைகளின் மேல் தெளிக்க வேண்டும்.

**மையல் அழுகல் நோய்**

- ✤ தாக்கப்பட்ட பயிர்களுக்கு 0.1 சதம் போசிட்டில் ஏ.எல்–ஐ தெளிக்க வேண்டும்.

**பழம் அழுகல் நோய்**

- ✤ அழுகிய மொட்டு (அ) அடிப்பகுதியை காயவைக்காமலும், சரியான காற்றோட்ட வசதி இல்லாமல் இருந்தாலும் இந்நோய் ஏற்படும்.
- ✤ முதிர்ந்த செடிகளின் கழுத்துப் பகுதியிலும் புண் மூலமாக பூசணம் பரவி செடியை அளித்து விடும்.
- ✤ இதனைக் கட்டுப்படுத்த பயிரிடப் படும் நாற்றுக்களை 0.3 % டைத்தேன் Z – 78 கரைசலில் முக்கி எடுக்க வேண்டும் (அ) இலைகளின் மேல் தெளிக்க வேண்டும்.

**அறுவடை மற்றும் மகசூல்**

- ✤ கன்று நட்ட 12 மாதங்கள் பூ வர ஆரம்பித்து 18 முதல் 24 மாதங்களில் பழங்கள் அறுவடைக்குத் தயாராகும்.
- ✤ பக்கக் கன்றுகள் மற்றும் நாற்றாங்கால் கன்றுகள் நடும் பொழுது அச்செடிகள் காய்ப்பதற்கு சுமார் 18 மாதங்கள் ஆகின்றன.
- ✤ அன்னாசி கொண்டைகள் 24 மாதங்களிலும், மேல் கன்றுகள் 22 மாதங்களிலும் காய்ப்பிற்கு வரும்.
- ✤ பழங்கள் மஞ்சள் நிறமாக மாறியபின் அறுவடை செய்யவேண்டும்.
- ✤ எக்டருக்கு 50 டன் பழங்கள் மகசூலாகக் கிடைக்கும். ✤

---

**கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களைத் திரும்ப அனுப்ப இயலாது.**

**கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எழுதுபவரின் கருத்தாகும். – ஆசிரியர்**

---

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published on behalf of Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: K.G. Madhavan, Additional Registrar / Administrator, Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.

Date of Publication : First Week of Every Month
Registered Newspaper in India No. 1103 / 57

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.
TNSC BANK LTD.,
Chennai - 600001.

வங்கிச் சேவையில் 100 ஆண்டுகளைக் கடந்த வங்கி
நம்பிக்கை – நாணயம் – அதிக பாதுகாப்பு

1 மாதச் சம்பளம் பெறுவோர்க்கு சம்பளக் கடன் ரூ.7 இலட்சம் வரை வட்டி 11% p.a



2 அரசு ஊழியர் / ஆசிரியர்களுக்கு தனி நபர் கடன் ரூ.1 இலட்சம் வரை வட்டி 11% p.a

3 சிறு / குறு வியாபாரிகளுக்கு சிறு வணிகக்கடன் ரூ.50,000 வரை வட்டி 10% p.a

4 E.M.I. நகைக்கடன் ரூ. 2 இலட்சம் வரை வட்டி Flat 5% p.a

5 குறைந்த வட்டியில் விரைவான நகைக்கடன் ரூ. 20 இலட்சம் வரை



6 குறைந்த வாடகையில் லாக்கர்கள் ரூ.999 முதல்

நகைக் கடன் கிராமுக்கு ரூ. 4000* வரை

- எந்தக் கிளையிலும் பரிவர்த்தனை செய்யும் வசதி
- RTGS / NEFT / IMPS
- Netbanking / Mobile Banking
- Billdesk Facilities

www.tnscbank.com contact@tnscbank.com
25302316 / 25302354

* Conditions Apply






விலை : ரூ. 20.00


C.C. BANK
சென்னை மத்திய
கூட்டுறவு வங்கி
215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.
தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087
Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in
(Since 1930)
சென்னை மாநகரில் 71 கிளைகள்
C.C. BANK
மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
ATM மற்றும் SMS வசதி
RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்
அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்
வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
சிறுவணிகக் கடன்
சம்பளக் கடன்
சுய உதவிக் குழுக்களுக்கான கடன்
(IFS Code: TNSC0010500)




புதியதோர் உலகம் செய்வோம் !
89
திருச்செங்கோடு-637 211.
வேளாண் பெருமக்களுக்கான
சேவைகள்
விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை விபரம்
திருச்செங்கோடு
பருத்தி, எள், நிலக்கடலை
செவ்வாய்
தேங்காய் பருப்பு
வெள்ளி
மஞ்சள்
சனி
கொங்கணாபுரம்
பருத்தி, எள்
சனி
நிலக்கடலை
ஞாயிறு, திங்கள், புதன்
மல்லசமுத்திரம்
பருத்தி
புதன்
நிலக்கடலை, மக்காச்சோளம்
திங்கள், வெள்ளி
தேங்காய் பருப்பு
வெள்ளி
ஜலகண்டாபுரம்
தேங்காய் பருப்பு
செவ்வாய்
இதர சேவைகள்
சங்கத்தின் சொந்த தயாரிப்புகள்
அம்மா
TCMS